www.tamilarangam.net

# புலி ஆதரவாளர்களின் நிலை?????

..ஈழத்தமிழர்களின் கதாநாயகனாக விளங்கும் பிரபாகரனின் வழிநடத்தலின் கீழ் வெற்றிநடை போடும் புலிகளின் கொள்கைகளையும், தியாகங்களையும் மண்தோண்டி புதைப்பதைப்போல் தங்களை தாங்களே புலிகள் எனக் கூறிக்கொண்டு பாரீஸ் மா நகரில், காடைத்தனத்தை வளர்த்து வரும் கைக்கூலிகளுக்கோர் எச்சரிக்கை . கடந்த சில வருடங்களுக்கு முன்னர் புலிகள் என்றாலே எவ்வித வேறுபாடுகளும் இல்லாமல் மரியாதை வைத்திருந்தவர்கள் பாரீஸ் வாழ் ஈழத்தமிழர்கள். இப்போது இவையெல்லாம் தலைகீழாக மாறிப்போய்விட்டது. ஈழத்தமிழரிடமிருந்து பெருகிடும் பணம் பல வழிகளிலும் பணம் கொடுத்த ஈழத்தமிழர்களையே அச்சுறுத்தும் வகையில் இருப்பது வெட்கப்பட வேண்டியதொன்று. இலங்கை இராணுவம் ஈழத்தமிழ் வாலிபர்களை அழித்தொழிக்கின்றதென பத்திரிகைகளில் கூக்குரலிடும் இவர்கள். இங்கு தமது இனத்தைத் தாமே அழிக்கும் முயற்சியில், ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார்கள் என்றால் இதிலும்பார்க்க இலங்கை அரசாங்கமே மேலானது என்ற எண்ணம் பாரிஸ்வாழ் ஈழத்தமிழர்கள் மத்தியில் வளர்ந்தவண்ணமிருக்கிறது. புலிகள் என்றபோர்வையில் இங்கே ரௌடித்தனமாக உலாவிக் கொண்டிருக்கும் பாரிஸ் கிளையின் கைக் கூலிகள்தான் இதற்கு காரணம்.

இவர்கள் செய்யும் அட்டகாசங்கள் சில

1இயக்கம் என்ற போர்வையில் காடையர்களை வெவ்வேறு இடங்களிலிருந்து பாரிஸ் மாநகருக்கு வரவழைத்து ஊர்ரீதியான மோதலை ஏற்படுத்துவது.

2.லாச் சப்பலில் தங்களது கைக்கூலிகளை அட்டகாசம் புரிய விட்டு தாங்களே அடக்குவது போன்றநடிப்பது.

3.கணவன் மனைவி குடும்பப் பிரச்சனையில்தலையிட்டு விசாரிப்பது போல் கூப்பிட்டு தகாத முறையில் நடந்துகொள்வது இவற்றை வெளியே சொன்னால் உயிருக்கே ஆபத்து என எச்சரிப்பது.

4 பத்திரிகைகள் நீதியாக பிரசுரிக்கும் செய்திகளை தங்களுக்கெதிரானது என கற்பனை செய்து பத்திரிகை ஆசிரியர்களைத் தாக்குவது.

5. தங்களுக்கெதிரான பத்திரிகைகள் என இவர்கள் நினைக்கும் பத்திரிகைகளை விற்பனை செய்யும் வர்த்தக நிறுவனங்களை பொதுமக்கள் முன்பாக தாக்குவது வாகனங்களைத்தீயிட்டு கொளுத்துவது.இவை பொதுமக்களிடத்தில் அதிருப்தியை எற்படுத்துபவை

6.வர்த்தகர்களிடம் நிதியுதவி கேட்டு கொடுக்கா விட்டால் காடைத்தனம்புரிவது.

7.இப்படியான பொதுமக்களின் நிதியுதவியில் வளர்க்கப்படும் காடையர்கள் லாச் சப்பல் வீதியால் செல்லும் தாய்மார்களிடமும் இளம் பெண்களிடமும் ரௌடித்தனம் புரிவது இந்தப்பழியை சும்மாதிற்கும் அப்பாவி இளைஞர்களில் சுமத்துவது.

8.இவற்றை யெல்லாம் பார்த்து பொறுக்காத தமிழ் இளைஞர்கள் ஏன் என்று கேட்டால் காரில் கடத்திச் சென்று தாக்குவது இதற்கும் மிஞ்சினால் ஆளையே தீர்த்துக்கட்டுவது.

9.தமிழ் இளைஞர்களின் வதிவிடங்களுக்குள் முன் அறிவித்தலின்றி உட்புகுந்து தாக்குவது.

10.பொது மக்களின் பணத்தில் வாங்கிக் குடிக்கும் பியர் போத்தல்களை தமிழ் வியாபார நிலையங்களுக்கு முன்பாகவே வீசி விட்டு செல்வது ஏன் என்றும் கேட்டால் கடைக்குள் புகுந்து கலாட்டா செய்வது.

11. ஏன் என்று கேட்கும் வியாபாரிகளின் பிள்ளைகளைக் கடத்திச் சென்று பணம் பறிப்பது.

12. தங்களுக்கெதிரானவன் என இவர்கள் கற்பனை செய்யும் ஒரு தமிழனைத் தாக்குவதற்கு 30-40 தமிழ்க் காடையர்களை சேர்த்துநிற்பது.

13. அட்டகாசம் புரிபவர்கள் என இவர்கள் முத்திரை குத்தும் அப்பாவி இளைஞர்களை இயக்கக்கந்தோருக்குக் கூப்பிட்டு அவர்களுக்கு எச்சரிப்பதென நினைத்து பாரிஸ் வாழ் தமிழர்க்ளையே எச்சரிக்கின்றார்கள்.

இப்படியான செய்கைகள் எல்லாம் பொதுமக்களை புலிகளிடத்தில் வெறுப்படையச் செய்யும் நடவடிக்கைகளாகும். இப்படியான காடையர்கள் பாரிசுக்கு வெளியே தனிச் சொந்த வீட்டில் இருப்பவர்களாகவும் புதிய வாகனங்கள் வைத்திருப்பவர்களாகவும் வேலையற்றவர்களாகவும் இருப்பது கவனிக்கத்தக்கது. பொது மக்களாகிய நாங்கள் தமிழ் ஈழத்துக்கெனக் கொடுக்கும் பொதுப்பணம் இப்படியாக பாரிஸ் மா நகரிலேயே துர்க்காரியங்களுக்குப்பயன் படுத்துவதைத் தடுக்க ஒன்றுபடுவோம். இப்படி நீதி கேட்கும் நாங்கள் மாற்று இயக்கத்தவரோ எதிரிகளோ அல்ல நாங்களும் புலிகளின் ஆதரவாளர்களே. ஆனால் பாரிசில் உள்ள புலிகளின் தலைமையையும் ரௌடிக் கும்பலையும் தான் எதிர்க்கின்றோம் இவர்களுக்கு நிதியுதவி அளிப்பது தமது இனத்தை தாமே அழிப்பதற்கு நிகரானது. எனவே பாரிஸ் வாழ் தமிழ் மக்களே, வர்த்தகர்களே நீங்கள் புலிகளுக்கு உதவவேண்டும் என நினைத்தால் பிரபாகரனுக்கோ அல்லது ஐரோப்பாவில் நீதியாக இயங்கும் புலிகள் இயக்கக்கிளைக் கோ உதவுங்கள்.இங்குள்ளவர்களுக்கு உதவி செய்து உங்களை நீங்களே அழிப்பதற்கு முன்னிற்காதீர்கள் நீங்கள் வழங்கும் எந்த நிதியுதவியும்...களத்தைச் சென்றடைவதை உத்தரவாதப்படுத்துங்கள். காடைத்தனத்துக்கு முற்றுப்புள்ளி வையுங்கள் . துப்பாக்கிகள் தமிழினத்தின் பக்கம் திரும்புவதற்கு இடம் கொடுக்காதீர்கள்.

**புலிகளின் ஆதரவாளர்கள்.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்